2016 ஆகஸ்ட் 3] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

எனவும் மத்திய நீர்க் குழுமம் தெரிவித்தது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி, இடைக்கால நிதிநிலை அறிக்கை 2016–2017–ல், அத்திக்கடவு–அவினாசி வெள்ளக் கால்வாய்த் திட்டத்தினை நீர்ப்பாசனம், நிலத்தடி நீர் செறிவூட்டும் மற்றும் குடிநீர் வழங்கல் திட்டமாகச் செயல்படுத்த அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்திற்காக 1,694 ஏக்கர் பட்டா நிலத்தையும், 28 ஏக்கர் வன நிலத்தையும் கையகப்படுத்தும் முதற்கட்டப் பணிகளை மேற்கொள்ள ரூ.327 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு திருத்திய மதிப்பீடு ரூ.3,523 கோடிக்குத் தயாரிக்கப்பட்டு, மத்திய நீர்க் குழுமத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. வனத் துறை மற்றும் சுற்றுப்புறச்சூழல் அமைச்சகத்தின் ஒப்புதலைப் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(ஆ) மானியக் கோரிக்கையின்போது தினமும் பிரதான எதிர்க்கட்சிக்கு விவாதத்தை முடித்து வைக்கும் வாய்ப்பு வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு) திரு. துரைமுருகன் அவர்கள்.*

***திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இன்றைய கூட்டத் தொடரில் பேசவிருக்கும் சட்டமன்ற உறுப்பினர்களின் பட்டியலைப் பார்த்தேன். மானியக் கோரிக்கை விவாதத்தில், பிரதான எதிர்க்கட்சி* wind–up *பண்ணி பேசிய பிறகுதான், மாண்புமிகு அமைச்சர்கள் பதிலுரை வழங்குவார்கள். ஆனால், அந்த வாய்ப்பினை பிரதான எதிர்க்கட்சிக்குத் தராமல், நீங்கள் ஆளுங்கட்சிக்குக் கொடுத்திருக்கிறீர்கள். என்னைப் பொறுத்தவரையில், என் அனுபவத்தில், இதுவரையில் இவ்வாறு நடைபெற்றதில்லை. பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர்கள்தான்* wind–up *பண்ணுவார்கள்; உடனே, மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்வார்கள். நீங்கள் வேண்டுமெனில், முன்பு நடைபெற்ற அவை நடவடிக்கை குறிப்புகளை எடுத்துப் பாருங்கள். (குறுக்கீடு) இல்லை, எடுத்துப் பாருங்கள். (குறுக்கீடு) இல்லையென்று சொல்லப் போகிறீர்களா? (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இது வழக்கமாக பேரவைத் தலைவர் முடிவு செய்வதுதான். பார்த்துக்கொள்ளலாம், முன்னுதாரணங்கள் உள்ளன. உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) பார்த்துக் கொள்ளலாம், உட்காருங்கள்.*

3. கவன ஈர்ப்பு

திருவண்ணாமலை மாவட்டம், துணிநூல் கல்லூரி தொடங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.*

திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டத்தில் துணிநூல் கல்லூரி துவக்க வேண்டியதன் அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமது பெரும் செயலால், பெரும் திறனால், பெரும் மனதால், தமிழ்நாட்டின் பெருமைக்குப் பெருமை சேர்க்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் என் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிவுடன் வணங்கி, துவங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்த விரிவான விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.